[திரு. இரா. துரைக்கண்ணு] [*2020 செப்டம்பர் 16 பிற்பகல் 1–25*]

ஒன்றை மட்டும் இறுதியாகச் சொல்கிறேன். தவறு செய்தவர்கள் எவரும் தப்பிக்க முடியாது. எந்த ஒரு நல்ல நிரபராதியான விவசாயிக்கும் கிடைக்க வேண்டிய நிதி கிடைக்காமல் போகாது என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அறிவிப்புகள்

(அ) காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையை உருவாக்க குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 15 வரை), உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 16) ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 2018–2021 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து மூன்றாவது முதல் நூற்று எழுபத்து ஒன்றாவது வரையிலான 19 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபதாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான 17 அறிக்கைகள் மற்றும் அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்து எட்டாவது அறிக்கை ஆகியவை பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 'அ'–ல், வரிசை எண்கள் 5 முதல் 16 வரையுள்ள 12 அறிவிக்கைகள், 'அ'–ல், வரிசை எண்கள் 17 முதல் 54 வரை மற்றும் 'ஆ'–ல் வரிசை எண் 11–ல் குறிப்பிட்டுள்ள ஆண்டறிக்கை ஆகிய 39 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கை ஆகியவற்றின் மென்பொருள் வடிவம்* PDF *முறையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2020 செப்டம்பர் 16] *[பேரவைத் தலைவர்]*

பேரவை விதி 51-ன்கீழ் 2,000 உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியில்லாதவைகளாக மாற்றம் செய்யப்பட்டு, 10 பட்டியல்களாக 6 முதல் 15 வரை மற்றும் 100 உடுக்குறியிடாத வினாக்கள் கொண்ட 16 ஆவது பட்டியல் ஆகியவற்றின் வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணை பட்டியலாக தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம் PDF *முறையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளன. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் மற்றும் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றம் செய்யப்பட்ட வினாக்கள்-விடைகள் ஆகியவற்றின் நகல்கள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேற்குறிப்பிட்ட வினாக்கள்-விடைகள் பட்டியல்களின் தலா இரண்டு பிரதிகளும், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றின் 10 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்திலுள்ள சட்டமுன்வடிவு-1 பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) கொரோனா தொற்று காரணமாக திருவண்ணாமலை மற்றும் திருக்கோயிலூர் நகராட்சிகளுக்குட்பட்ட மூடப்பட்டிருந்த கடைகளுக்கான வாடகையை இரத்து செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு, என்ன?*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகிறேன். அரசினுடைய ஆணையை ஏற்று 5 மாதக் காலமாக கொரோனா வைரஸ் தொற்றால் திருவண்ணாமலை மற்றும் திருக்கோயிலூர் நகராட்சிகளுக்கு உட்பட்டிருக்கிற கடைகள் என தமிழ்நாடு முழுவதும் உள்ள கடைகளெல்லாம் மூடப்பட்டிருந்தன. இப்பொழுது அந்தக்*